<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 07.02.2026

அசல் வழக்கு எண். 204/2020

வா.சா. 1 – முத்து, த/பெ. ஆப்ரகிரம்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை**</u>

வழக்கு எதற்காக தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சொத்துக்கு உரிமையாளர் என்ற உரிமை பரிகாரமும், அதுமட்டுமல்லாமல் நந்தகுமார் என்பவரது பவர் டாக்குமெண்ட் மீராபாய் என்பவர் அது கிரையப்பத்திரம், மொய்தீன் அப்துல் காதர் என்பவரது பவர் டாக்குமெண்ட், மொய்தீன் பாத்திமா என்பவரது கிரைய பத்திரம் செல்லத்தக்கதில்லை என்றும் ரத்து செய்யக் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எப்பொழுது யாரிடமிருந்து நீங்கள் வாங்கினீர்கள் என்றால் கனகா என்பவரது பொது அதிகார முகவர் ரமேஷ் என்பவரிடமிருந்து கடந்த 29.04.2014 அன்று கிரையம் வாங்கினேன். அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் எல்லாம் கடனில் உள்ளது அதை வாங்கி தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் அவ்வாறு அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை ஜெராக்ஸ் ஆவணம் மட்டுமே தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. வா.சா.ஆ.4 ஜெராக்ஸ் நகல் என்று தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து குடியிருப்பு பகுதியா அல்லது கமர்சியல் பகுதியா என்றால் கடைகட்டி உள்ள பகுதியாகும். நீங்கள் எவ்வளவு சதுர அடி வாங்கினீர்கள் என்றால் 1368 சதுர அடி வாங்கினேன். வழக்கு சொத்துக்கான லேஅவுட் தாக்கல் செய்தீர்களா என்றால் செய்துள்ளேன். மேற்படி வரைபடத்தில் எவ்வளவு சதுர அடி

உள்ளது என்றால் 1905 சதுரடி என்று உள்ளது. அந்த வரைபடம் உங்களிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் அது **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீங்கள் சொத்து வாங்கும் பொழுது வில்லங்கம் பார்த்து வாங்கினீர்களா என்றால் வில்லங்கம் பார்த்து தான் வாங்கினேன். உங்களிடம் காட்டப்படுகின்ற வில்லங்கச் சான்றிதழில் எத்தனை சதுரஅடி போட்டு உள்ளது என்றால் 1905 சதுரடி என்று போட்டுள்ளது. வில்லங்கச் சான்றிதழில் கடந்த 22.10.1999 ஆம் ஆண்டு முதல் பிரதிவாதி கனகா என்பவர், இரண்டாவது பிரதிவாதி நந்தகுமார் மூலமாக மூன்றாவது பிரதிவாதி மீரா பாய் என்பவருக்கு விற்பனை செய்து உள்ளார் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மூன்றாவது பிரதிவாதி மீராபாய் கிரையம் வாங்கியதிலிருந்து அவர்தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியில்லை. வாங்கிய நாளிலிருந்து நான் தான் அனுபவத்தில் இருந்து வருகிறேன். சட்டத்திற்கு உட்பட்டு வாங்கியுள்ளேன். மீராபாய் என்பவர் கடந்த 05.06.2014 அன்று நான்காம் பிரதிவாதி மொய்தீன் அப்துல் காதர் என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்தார் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உங்களிடம் காட்டப்படுகின்ற விற்பனை ஆவணம் என்பவர் நான்காம் பிரதிவாதி பொது அதிகார முகவர் என்கிற அடிப்படையில் ஐந்தாம் பிரதிவாதி மொய்தீன் பாத்திமால் என்பவருக்கு விற்பனை செய்து உள்ளார் உங்களுடைய உங்களிடம் காட்டப்படுகின்ற ஆவணம் அது என்றால் சரிதான். அது **பி.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்து சர்வே எண் என்றால் 307/2, 307/3 ஆகும். மூன்றாவது பிரதிவாதி தான் உங்களுக்கு முன்பாக வாங்கினார்

அவர்தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் நீங்கள் அனுபவத்தில் இருந்து வருவதாக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. வாங்கிய நான் முதல் நான்தான் குடியிருந்து வருகிறேன் அதற்கு நீங்கள் வரி கட்டி வருகிறீர்களா என்றால் வரி கட்டி வருகிறேன். நீங்கள் பற்றுதல் சீட்டு போட்டு இருப்பதாக சொல்கிறீர்கள் அது எந்த தேதியில் இருந்து போட்டு உள்ளீர்கள் என்றால் 2014 இல் இருந்து கட்டி வருகிறேன். நீங்கள் 2019ல் இருந்து தான் கட்டியதாக ரசீது போட்டு உள்ளீர்கள் என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். முதல் பிரதிவாதி எப்போது இறந்தார் தெரியுமா என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. 2019 ஆம் ஆண்டு காலகட்டம் கொரோனா காலகட்டம் என்றால் பிரதிவாதி அங்கு வந்து பார்க்கவில்லை என்பதால் நீங்கள் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து விட்டீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.